# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.184/2023

## அ.சா.13 (LW 21 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. ராஜசேகர்** | **தொழில்** | |
| **த/க பெயர்** | செல்வநாயகம் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **10.02.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1வது எதிரிஆஜர்.**

**எதிரி வழக்கறிஞர் ஆஜர், இலவச சட்ட உதவி மைய வழக்கறிஞர் திரு.A. ஜேம்ஸ் இளங்கோ ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை மாநகர் விளக்குத்தூண் சட்ட ஒழுங்க காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் நகர் மேற்கு காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணியில் இதற்கு முன்பு இருந்த போது மேற்படி காவல் நிலைய சார்பு காவல் ஆய்வாளர் திரு.மலைச்சாமி 08.06.2023 அன்று நிலைய பொறுப்பில் இருந்த போது 16.30 மணிக்கு பொத்தைய கவுண்டன்பட்டியை சார்ந்த சிட்டிலிங்கம் மகன் கோபிநாத் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற.224/2023 பிரிவு 302 இதச என பதிவு செய்து வைத்திருந்த வழக்கின் விசாரணையை 08.06.2023 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று 17.30 மணிக்கு சாட்சிகள் சக்திவேல், காளியப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.13 ஆக குறியிடப்பட்டுள்ளது. அந்த வரைபடம் அ.சா.ஆ.14 ஆக குறியிடப்படுகிறது.** பின்பு அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இரத்தகரைபட்ட சிமெண்ட் கல் மாதிரிக்கு சிறிதளவு மற்றும் இரத்தகரைபடாத சிமெண்ட் கல் மாதிரிக்கு சிறிதளவு மற்றும் கொலையுண்ட நபருக்கு சொந்தமாக TN–64–C–1132 என்ற எண்ணுள்ள Spelender Hero Honda இருசக்கர வாகனத்தை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.15 ஆக குறியிடப்படுகிறது.**

அத்தாட்சியில் நான் கைப்பற்றிய இரத்தகரைபட்ட சிமெண்ட் கல் மாதிரிக்கு சிறிதளவு **சா.பொ.1 ஆக** குறியிடப்படுகிறது. இரத்தகரைபடாத சிமெண்ட் கல் மாதிரிக்கு சிறிதளவு **சா.பொ.2 ஆக** குறியிடப்படுகிறது. கொலையுண்ட நபருக்கு சொந்தமாக TN–

64-C-1132 என்ற எண்ணுள்ள Spelender Hero Honda இருசக்கர வாகனம் **சா.பொ.3 ஆக** குறியிடப்படுகிறது ( **புகைப்படம் 2 எண்ணிக்கை). (வாகன எண் புகைப்படத்தில் காணப்படவில்லை மற்றும் மேற்படி சான்று பொருள் 3 ஐ புகைப்படம் எடுத்த நகலை டிவிடியில் பதிவிறக்கம் செய்யப்பட்டதற்கான சாட்சிய சட்டம் பிரிவு 65B ன் கீழான சான்றிதழ் இல்லாத நிலையில் ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் வழக்கின் சாட்சிகள் கோபிநாத், அரவிந்த குமார், சாதிக், மைக்கேல் ஜெயபால், ஈஸ்வரி, சேகர், ராஜபாண்டி மற்றும் பார்வை மகஜர், அத்தாட்சி சாட்சிகளான காளியப்பன், சக்திவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 09.06.2023 அன்று காலை 06.00 மணிக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் வைத்து வழக்கு சம்பவத்தில் கொலையுண்ட அழகுபாண்டி பிரேத்தின் மீது பஞ்சாயத்ததார் முன்னிலையில் காலை 06.00 மணி முதல் 08.00 பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.16 ஆக குறியிடப்படுகிறது.** பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான ரமேஷ், சஞ்சய் குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்தவரின் இறப்பிற்கான காரணம் அறியும் பொருட்டு மேற்படி இறந்தவரின் பிரேதத்தை பிரேத அறிக்கை வழங்குமாறு கேட்டு சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.மகாராஜன் என்பவர் மூலமாக வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன்.

வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் அன்று காலை 09.00 மணிக்கு தகவலாளி அடையாளம் காட்டியதன் பேரில் திண்டுக்கல் சிறுமலை பிரிவில் மாதா கெபி அருகில் வைத்து இருசக்கர வாகனத்தில் வந்த வழக்கின் 1,2 எதிரிகளை கைது செய்து விசாரிக்க மேற்படி எதிரிகளில் 1 ஆம் எதிரி அசோக்குமார் என்பவரை விசாரிக்க அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 09.15 மணிக்கு சாட்சிகள் பாலமுருகன், தமிழழகன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து, 1 ஆம் எதிரியிடமும் மேற்படி சாட்சிகளிடமும் கையொப்பம் பெற்றேன். பின்னர் கைது செய்யப்பட்ட 2 ஆம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 10.15 மணிக்கு பதிவு செய்து சாட்சிகள் பாலமுருகன், தமிழழகன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து, 2 ஆம் எதிரியிடமும் மேற்படி சாட்சிகளிடமும் கையொப்பம் பெற்றேன்.

2 ஆம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவத்தின் போது பயன்படுத்திய TN-57-BF-3902 என்ற பஜாஜ் இருசக்கர வாகனத்தை ஆஜர்படுத்தியதை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன் அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.17 ஆக குறியிடப்படுகிறது.** மேற்படி அத்தாட்சியின் பேரில் நான் கைப்பற்றிய TN-57-BF-3902 என்ற பஜாஜ் **சா.பொ.4 ஆக குறியிடப்படுகிறது. ( புகைப்படம் 4 எண்ணிக்கை) (மேற்படி சான்று பொருள் 4 ஐ புகைப்படம் எடுத்த நகலை டிவிடியில் பதிவிறக்கம் செய்யப்பட்டதற்கான சாட்சிய சட்டம் பிரிவு 65B ன் கீழான சான்றிதழ் இல்லாத நிலையில் ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**

ஒப்புதல் வாக்குமூலத்தில் 1 ஆம் எதிரி தன்னை அழைத்து சென்றால் சம்பவத்தின் போது உடுத்தி இருந்த ஆடைகளையும், சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாளை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னதன் பேரில் திண்டுக்கல் சிறுமலை ரோடு இரண்டலைப்பாறை பஸ் டாப்பிற்கு பின்புறம் இருந்து எடுத்து ஆஜர் செய்த

மரக்கை பிடியுடன் கூடிய 54 1/2 cm நீளமுள்ள, அதில் மரக்கை பிடி 12 cmம் இரும்பு பாகம் சுமார் 40 cm, பூனின் நீளம் சுமார் 2 1/2 cm உடைய அரிவாள் ஒன்று, இளம் பச்சை வெள்ளை கருப்பு கோடு போட்ட சட்டை ஒன்று, நீளம் இளம்பச்சை கட்டம் போட்ட கைலி ஒன்று மற்றும் 2 ஆம் எதிரி அதே இடத்தில் இருந்து சம்பவத்தின் போது உடுத்தி இருந்ததாக சொல்லி எடுத்து ஆஜர் செய்த ரத்தக்கரை படிந்த கருநீளம் சிவப்பு கோடு போட்ட அரைக்கால் டவுசர் ஒன்று, ப்ளூ கருப்பு கட்டம் போட்ட சட்டை ஒன்று ஆகியவற்றை 12.00 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன்.

1ஆம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.18 ஆக குறியிடப்படுகிறது. 2** ஆம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.19 ஆக குறியிடப்படுகிறது.** மேற்படி 1,2 ஆம் எதிரிகள் எடுத்து ஆஜர் செய்த அரிவாள் மற்றும் ஆடைகளை கைப்பற்றிதற்கான அத்தாட்சி **அ.சா.ஆ.20 ஆக குறியிடப்படுகிறது.** மேற்படி அத்தாட்சியின் பேரில் நான் கைப்பற்றிய மரக்கை பிடியுடன் கூடிய 54 1/2 cm நீளமுள்ள, அதில் மரக்கை பிடி 12 cmம் இரும்பு பாகம் சுமார் 40 cm, பூனின் நீளம் சுமார் 2 1/2 cm உடைய அரிவாள் ஒன்று, **சா.பொ.5 ஆக குறியிடப்படுகிறது.** இளம் பச்சை வெள்ளை கருப்பு கோடு போட்ட சட்டை ஒன்று, **சா.பொ.6 ஆக குறியிடப்படுகிறது.** நீளம் இளம்பச்சை கட்டம் போட்ட கைலி ஒன்று **சா.பொ.7 ஆக குறியிடப்படுகிறது.** ரத்தக்கரை படிந்த கருநீளம் சிவப்பு கோடு போட்ட அரைக்கால் டவுசர் ஒன்று **சா.பொ.8 ஆக குறியிடப்படுகிறது.** ப்ளூ கருப்பு கட்டம் போட்ட சட்டை ஒன்று **சா.பொ.9 ஆக குறியிடப்படுகிறது.** பின்பு கைது செய்யப்பட்ட எதிரிகள் மற்றும் கைப்பற்றபட்ட சொத்துக்களுடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 16.00 மணிக்கு பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தில் இருந்து பகுப்பாய்வுக்காக இரத்தக்கரை படிந்த SKY பூளு முழுக்கை சட்டை ஒன்று, வெட்டி எடுக்கப்பட்ட புளுக்கலர் பூமர் ஜட்டி ஒன்று, ரத்தக்கரை படிந்த கருப்புக்கலர் லொயர் ஒன்று ஆகியவற்றை சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆஜர் செய்ததை படிவம் 91ல் கைப்பற்றினேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.21 ஆக குறியிடப்படுகிறது.** மேற்படி படிவம் 91 ல் நான் கைப்பற்றிய பிரேத்தில் இருந்து இரத்தக்கரை படிந்த வெட்டி எடுக்கப்பட்ட SKY ப்ளு முழுக்கை சட்டை ஒன்று **சா.பொ.10 ஆக** குறியிடப்படுகிறது. வெட்டி எடுக்கப்பட்ட புளுக்கலர் பூமர் ஜட்டி ஒன்று **சா.பொ.11 ஆக** குறியிடப்படுகிறது. ரத்தக்கரை படிந்த கருப்புக்கலர் லோயர் ஒன்று **சா.பொ.12 ஆக** குறியிடப்படுகிறது. அன்றைய தினமே ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் பாலமுருகன், தமிழழகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 12.06.2023 அன்று திண்டுக்கல் மேட்டுப்பட்டியை சேர்ந்த பாலசுப்பிரமணியம் என்பவரின் மகன் S.B.மில் சிவா என்பவரை வரவழைத்து சம்பவ இடத்தின் அருகில் உள்ள ஜனனா லாட்ஜ்-ல் உள்ள CCTV கேமிராவில் பதிவாகி உள்ள 08.08.2023 ஆம் தேதி அழகுபாண்டி என்பவரை எதிரிகள் அசோக்குமார், மகேந்திரன் ஆகியோர்கள் வெட்டி கொலை செய்யும் சம்பவத்தினை பதிவு செய்திருந்த CCTV Footage மற்றும் DVR-ல் இருந்து 18.18 மணிக்கு HP 16 GB பென்டிரைவ் மற்றும் MyChoise 4.7GB DVD கேசட் ஆகியவற்றில் இருந்து பதிவிறக்கம் செய்து கொடுத்தார்.

மேற்படி HP 16 GB பென்டிரைவ் மற்றும் MyChoise 4.7GB DVD கேசட்-ஐ படிவம் 91 மூலம் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் – 91 அ.த.சா.ஆ. 22 ஆகும். மேற்படி HP 16 GB பென்டிரைவ் சா.பொ.13.ஆகும். MyChoise 4.7GB DVD கேசட் சா.பொ.14. ஆகும். (மேற்படி சான்று பொருள் 13 , 14ல் Soft copy நகல் வழங்கப்பட்டவில்லை என்றும் அதற்கான 65B சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**

TN-57-BF-3902 என்ற பஜாஜ் இருசக்கர வாகனத்திற்கான **புகைப்பட டிவிடி சா.பொ.15. ஆகும். (மேற்படி சான்று பொருள் 15 ன் நகல் வழங்கப்பட்டவில்லை என்று ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி சாட்சி S.B.மில் சிவா என்பவரை அன்றை தினமே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 19.06.2023 அன்று வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்து ஆர்.பி.ஆர் 47/2023 பெற்றேன். 08.06.2023 அன்று 18.30 மணிக்கு கைப்பற்றிய திண்டுக்கல் பழனி ரோடு பூச்செண்டு பெட்ரோல் பங்க்ல் உள்ள சம்பவ இடத்தில் இரத்தகரை படிந்த சிமிண்ட் கல் ஒன்று, இரத்தக் கறை படியாத சிமிண்ட்கல் ஒன்று, TN 64- C-1132 Hero Honda splender ஆகியவற்றை கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பிய **படிவம் -91 அ.த.சா.ஆ.23.** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு 09.06.2023 அன்று காலை 11.30 மணிக்கு திண்டுக்கல் நத்தம் ரோடு சிறுமலை பிரிவு மாதா கெபி அருகே 2 வது எதிரி எடுத்து ஆஜர் படுத்திய TN 57- BF - 3902 பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தை கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பிய **படிவம் -91 அ.த.சா.ஆ.24.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 09.06.2023 அன்று திண்டுக்கல் சிறுமலை ரோடு இரண்டலப்பாறை பஸ்ஸ்டாப் பின்புறம் 1,2 எதிரிகள் எடுத்து ஆஜர்படுத்திய மரக்கைப்பிடியுடன் கூடிய அரிவாள் ஒன்று கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பிய **படிவம் -91 அ.த.சா.ஆ.25.** ஆக குறியீடு செய்யப்படுகிறது பின்பு 21.06.2023 அன்று இறந்தவரின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புக்களை RFSL ஆய்வுக்காக சிறப்பு சார்பு ஆய்வாளர் மகாராஜன் என்பவர் மூலம் ஒப்படைத்தேன். பின்பு 26.06.2023 ம் தேதி சாட்சிகள் முதல்நிலை காவலர் பிரகாஷ், துரித முதல் தகவல் அறிக்கை அலுவல் செய்தவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சிறப்பு சார்பு ஆய்வாளர் மகாராஜன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 25.07.2023 அன்று 164(5) வாக்குமூலம் பதிவு செய்ய நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன்.

பின்பு வழக்கில் இறந்து போன அழகு பாண்டி என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவர் திரு. அகமது சேக் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். பின்பு வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த மலைச்சாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 01.08.2023 அன்று பயாலஜி அறிக்கை வழங்கிய RFSL மதுரை இளநிலை அறிவியல் அலுவலர் சிவசங்கரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அறிக்கை பெற்றேன். **Serology report அ.த.சா.ஆ.26 ஆகும். Biology report அ.த.சா.ஆ.27 ஆகும்.** 164(5) வாக்குமூலம் பதிவு செய்ய நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு **நான் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.த.சாஆ.28. ஆகும்.**

பின்பு 03.08.2023 அன்று வழக்கில் கைப்பற்றப்பட்ட 1) HP 16 GB பென்டிரைவ் ஒன்று, 2) மற்றும் MyChoise 4.7GB DVD –1 ஆகியவற்றை நீதிமன்றத்தில் ஒப்படைத்து ஆர்.பி.ஆர்.எண்.63/2023 பெற்றேன். பின்பு இவ்வழக்கின் எனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது 24.08.2023 அன்று இதச பிரிவுகள் 302 ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். பின்பு வழக்கின் உதவிக்காக வழக்கு சொத்தினை முதல்நிலை காவலர்– 1011 சரவணக் குமார் என்பவர் மூலம் சென்னை தடயவியல் அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்புவதற்காக 25.09.2023 ம் தேதி திண்டுக்கல் நீதித்துறை நடுவர் எண்.1க்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். **அந்த வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.29.ஆகும்.** பின்பு 26.09.2023 அன்று நீதிமன்ற உத்தரவு பெற்று சென்னை தடயவியல் ஆய்வகத்தில் 27.09.2023 அன்று ஒப்படைக்கப்பட்டது. **அந்த நீதிமன்ற கடிதம் அ.த.சா.ஆ.30. ஆகும்.**

பின்பு 23.11.2023 அன்று இவ்வழக்கின் சென்னை தடயவியல் ஆய்வக அறிவியல் அதிகாரி திரு. லெட்சுமி நாராயணன் அவர்கள் கூடுதல் சாட்சியாக சேர்க்க நீதித்துறை நடுவர் எண்.1.அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். **அந்த வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.31.ஆகும்.** பின்பு 25.11.2023 அன்று சென்னை தடயவியல் ஆய்வக அறிவியல் அதிகாரி திரு. லெட்சுமி நாராயணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று சான்று பெற்றேன். **அந்த ஆய்வக அறிக்கை அ.த.சா.ஆ.32. ஆகும்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.10 20:52:38 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.